**MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.**

**முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.**

VOLUME – III ISSUE - II

FEB – 2026 E-ISSN : 2584 – 1238

# கோதை நாச்சியார் தாலாட்டில் தென்புதுவை இயற்கைவளம்

**ஆய்வாளர்**

சு.ஜெயசித்ரா,

முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ்உயராய்வுமையம்,தியாகராசர் கல்லூரி,

மதுரை. - 6369373383

**நெறியாளர்**

முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா,

உதவிப்பேராசிரியர்,

தமிழ் உயராய்வு மையம்,தியாகராசர் கல்லூரி,

மதுரை.

DOI 10.5281/zenodo.18514047.

**Abstract**

The Nalayira Divya Prabandham is one of the Vaishnavite religious literary works that emerged during the Bhakti literature period. The hymns composed by the twelve Alvars are known as the Nalayira Divya Prabandham. Among the twelve Alvars, Andal Nachiyar is the only female Alvar. Andal Nachiyar is worshipped by all as the Alvar who composed the Tiruppavai and Nachiyar Tirumozhi, and as the divine mother who attained union with Lord Vishnu through her intense devotion. Many minor literary works praising Andal Nachiyar appeared in later periods. Among them, the Kothai Nachiyar Thalattu (lullaby) falls under the category of Pillaitamil (a genre of Tamil poetry). The Kothai Nachiyar Thalattu beautifully records the history of Andal Nachiyar, her appearance, the prosperity of the city of Thenpuduvai, and the love of Periyalvar. This article focuses on analyzing the description of the prosperity of the city of Thenpuduvai as depicted in this work.

**Keywords :** Aandal – Thaalattu – Natural – Worship

**முகவுரை**

பக்தி இலக்கிய காலகட்டத்தில் தோன்றியவைணவ சமய இலக்கியங்களில் ஒன்று நாலாயிர திவ்வியப் பிரபந்தம் .பன்னிரண்டு ஆழ்வார்கள் இயற்றிய பாசுரங்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தம் எனப்பட்டன.பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒரே பெண் ஆழ்வார் ஆண்டாள் நாச்சியார். திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழியை இயற்றிய ஆழ்வாராகவும் , உயர் வைராக்கியத்தால் திருமாலுடன் ஐக்கியமான தாயாராகவும் ஆண்டாள் நாச்சியார்



http://Creativecommons.org//license/by/4.0/.

அனைவராலும் வணங்கப்படுகிறார் . ஆண்டாள் நாச்சியாரைப் போற்றிப் பாடி பிற்காலத்தில் பல சிற்றிலக்கியங்கள் தோன்றின . அவற்றுள் கோதை நாச்சியார் தாலாட்டு என்பது பிள்ளைத்தமிழ் வகைக்குள் அடங்குவதாக அமைகிறது . கோதை நாச்சியார் தாலாட்டில் ஆண்டாள் நாச்சியாரின் வரலாறு ,தோற்றவருணனை, தென்புதுவை நகரின் வளம் , பெரியாழ்வாரின் அன்புபோன்றவை மிக அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன . அவற்றுள் தென்புதுவை நகரின் வளத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கோதை நாச்சியார் தாலாட்டு

ஆண்டாள் நாச்சியாரைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்ட நூல்எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்கள் உபசரித்த கோதை நாச்சியார் தாலாட்டு .இந்நூல் 167 கண்ணிகளைக் கொண்டுள்ளது. காப்பு பகுதியில்

**" கரூர்ந்த தென்புதுவைக் கண்ணன் திருக்கோயில்**
**ஏரார்ந்த சேனையர்கோன் இணையடியும் காப்பாமே"**

என்ற வரிகள் இடம்பெற்றுள்ளது. நூல் பற்றிய அறிமுகமும் திரு அவதாரம் பற்றிய செய்திகளும் தலைப்பிட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளன.

வைணவ மரபின் அடிப்படையில் " **ஸ்ரீரங்கம் நம்பருமாள் பாதம் நமக்கே துணையாமே** " **-( கோ.நா.தா,2)** என்பதாக அரங்களை முதலில் வணங்கியுள்ளனர் . திருவில்லிபுத்தூர் நகரின் சிறப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளது . ஆண்டாளின் அவதாரம் பற்றிய செய்திகள் அதனைப் பின்தொடர்ந்து வருகிறது . ஆண்டாளை வருணிக்கும் வரிகளில் பெரியாழ்வார் பாசுரங்களின் தாக்கத்தைக் காணலாம்.இதனை ,

**" மாணிக்கம் கட்டி வயிர மிடைக்கட்டி**
**ஆணிப்பொன் னால் செய்த வண்ணச் சிறுதொட்டில்**
**பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்**
**மாணிக்கமே தாலேலோ மங்கையரே தாலேலோ"**

**-( கோ.நா.தா,44,45)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற வரிகளால் அறிய முடிகிறது . ஆண்டாளின் பாவை நோன்பு பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆண்டாள் திருமாலின் மீது கொண்ட பக்தியையும் அரங்கன் ஆண்டாளை திருவரங்கத்திற்கு அழைத்துவரச் சொன்னதையும் பற்றி மிக அழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது . ஆண்டாள் பாசுரங்களின் தாக்கமும் ஆங்காங்கே காணப்படுகிறது.இதனை,

**" மந்தரமார் கோடி யுடுத்து மணமாலை**
**யந்தரி சூட்டி அழகான கோதையர்க்கு" -( கோ.நா.தா,148)**

என்ற வரிகளால் அறிய முடிகிறது . இந்நூல் ஆண்டாள் நாச்சியார் திருமணத்துடன் நிறைவு பெறுகிறது. இறுதியில் வாழித் திருநாமம் பாடப்பட்டுள்ளது .

**" கோதையரும் வாழி கோயில்களும் தான் வாழி**
**சீதையரும் வாழி செகமுழுதும் தான் வாழி" -( கோ.நா.தா,167)**

என்ற மங்களத்துடன் கோதை நாச்சியார் தாலாட்டு நிறைவு பெறுகிறது.

## இயற்கையுடன் இயைந்த பக்தி

மனித வாழ்வு இயற்கையுடன் இயைந்தது . நம் முன்னோர்கள் இயற்கையை இறைவனாக வழிபட்டனர் . பல இலக்கியங்களும் இயற்கையில் இறைவனைக் காண்பித்தது . சங்க இலக்கியங்களிலும் இயற்கையையும் இறைவனையும் ஒன்றாக கருதிய நிலையை , " **தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ" -( பரிபாடல்,3 )** என்ற வரிகளால் அறியலாம். கோதை நாச்சியார் தாலாட்டும்," **உய்யும் பெருமாள் உயர் சோலை மலை அழகர்" -( 95 )**என்று சோலை மலையில் இருக்கும் அழகரைச் சிறப்பித்துக் குறிப்பிடுகிறது . ஆண்டாளும் நாச்சியார் திருமொழியில் திருமாலிருஞ்சோலை மலையில்இந்திரகோபப் பூச்சிகள் நிறைந்த தன்மையைப் ( நாச்சியார் திருமொழி,9-1) பாடியுள்ளார்.வைணவ சமயத்திலும் ஆழ்வார்களின் பாசுரங்களில் , " **பச்சை மாமலைபோல் மேனி "-(திருமாலை,2 )**என்று தொண்டரடிப் பொடி ஆழ்வார் இறைவனின் தோற்றத்தினை இயற்கையோடு ஒப்பிட்டுப் பாடியுள்ளார் . இயற்கை வளம் நிறைந்த ஊரில் இறைவன் இருப்பார் . பக்தியும் இருக்கும் . பக்தி நிறைந்த ஊரில் இயற்கை


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

வளமும் தானாக அமையும் . அதை இறைவனே அமைத்து தருவார் என்ற நம்பிக்கையே நம் முன்னோர்கள் வழியாகக் கற்பிக்கப்பட்டு இன்றுவரை நம்மிடையே வழக்கத்தில் உள்ளது . இயற்கை வளம் நிறைந்த திருவில்லிப்புத்தூரில் பெரியாழ்வார் நந்தவனம் அமைத்து மாலை தொடுத்து இயற்கையால் இறைவனை வழிபட்டார் . பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளான ஆண்டாளும் துளசிச் செடியின் அருகில் தான் தோன்றினார் . அவரும் வடபத்ரசயனருக்கு மாலையை சாற்றினார். பூமாலை, பாமாலை இரண்டும் இவ்விரண்டு ஆழ்வார்களாலும் பெரிய பெருமாளுக்கு சாற்றப்பட்டது . ஆண்டாள் தன்னுடைய பாசுரங்களில் இயற்கையைத் தூதுவிடும் பகுதி அமைந்துள்ளது.

மேகத்தைத் தூது விடுகையில்,

**" கார்காலத் தெழுகின்ற கார்முகில்காள்! வேங்கடத்துப்**
**போர்க்காலத் தெழுந்தருளிப் பொருதவனார் பேர்சொல்லீ"**
**( நாச்சியார் திருமொழி,8-8)**

என்பதாகத் தன்னுடைய ஏக்கத்தினை இயற்கையிடம் தெரியப்படுத்துகிறார் ஆண்டாள் . இதே நிகழ்வை ," **அன்றில் குயில் மேகம் அரங்கருக்குத் தூதுவிட "-( கோ.நா.தா,109)**என்று கோதை நாச்சியார் தாலாட்டும் குறிப்பிடுகிறது .மேலும் நாச்சியார் திருமொழியிலே திருவில்லிபுத்தூரின் வளத்தினை ஆண்டாள் குறிப்பிடுகிறார் .இதனை ," **மென்னடை அன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர் உறைவான் " ( நாச்சியார் திருமொழி ,5,5)** என்ற வரிகளால் அறியலாம் . அத்தகைய தென்புதுவையின் வளத்தினைகோதை நாச்சியார் தாலாட்டில் விலங்கினங்களின் மகிழ்ச்சி, பூக்களின் மலர்ச்சி , தாவரங்களின் நெகிழ்ச்சி , பஞ்ச பூதங்களின் உணர்ச்சி , இயற்கையைப் பேணும் வளர்ச்சி என்பதாக ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

## தென்புதுவை நகர்

தென்புதுவை நகர் என்பது தற்போது திருவில்லிபுத்தூர் என்று அழைக்கப்படுகிறது . வில்லி என்ற அரசன் புற்றுகள் நிறைந்த இவ்வூரைத் திருத்தி அமைத்ததால் வில்லிபுத்தூர் என்று அழைக்கப்பட்டது. பூமி தேவியின் அம்சமான ஆண்டாள் நாச்சியார் அவதாரம் செய்ததால் திரு


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

என்னும் அடைமொழி பெற்று திருவில்லிபுத்தூர் என்று அழைக்கப்படுகிறது . **'மல்லி வளநாடு'**என்ற பெயரும் இவ்வூரையேகுறிக்கிறது .விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ளது.பெரியாழ்வாரின் பாசுரங்களிலும் ஆண்டாள் நாச்சியாரின் பாசுரங்களிலும் 'புதுவை' என்ற சொல்லாடலே பெரும்பாலும் திருவில்லிபுத்தூரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதனை," **அணி புதுவை பைங்கமலத் தண்தெரியர் பட்டர்பிரான் கோதை சொன்ன " -( திருப்பாவை,30)**என்ற பாசுர வரிகளால் அறியலாம் .ஆழ்வார்களின் பாசுரங்களைப் பின்பற்றி இயற்றப்பட்ட சிற்றிலக்கியங்களிலும் 'புதுவை' என்ற சொல்லை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. திருவில்லிபுத்தூர் பெரிய கோபுரம் தமிழக அரசின் சின்னமாக விளங்குகிறது. ஆண்டாள் ஆயர்பாடியாக உருவகித்துப் பாசுரங்கள் இயற்றியதால் பால் சார்ந்த பொருட்களுக்கும் குறைபாடு இல்லாமல் பால்கோவா போன்ற இனிப்புகளுக்கும் புகழ்பெற்ற ஊராக விளங்குகிறது என்று மக்கள் கருதுகின்றனர்.

## கதிரவனும் நிலவும் உதவும்

திருவில்லிபுத்தூரில் வேத பாராயணம் நடைபெறும் பொழுது இயற்கை அதில் கலந்து கொள்வதாக கவிஞர் கற்பனை செய்கிறார். **" சந்திரனும் சூரியனும் சாமரங்கள் தான்போட" -( கோ.நா.தா,17)**என்று கதிரவனும் நிலவும் சாமரங்கள் போடுவதாக கவிஞர் குறிப்பிட்டுள்ளார் . மேலும் 137 வது கண்ணியிலும் ஆண்டாளின் திருமணத்திற்கு நடக்கும் ஏற்பாடுகளைக் குறிப்பிடுகையில் இதே கற்பனையைக் கவிஞர் கையாண்டுள்ளார் . பந்தல் சூரியனின் வெப்பத்தைமறைக்கும் அளவில் இருக்கும் என்ற வகையில்,

**" காவணங்கள் மேவிக் கதிரோன் தனைமறைக்கும்**
**பூவணங்கள் சூழ்ந்து புதுவை மணங்கமழும்"-( கோ.நா.தா,29)**

பந்தலைக் குறிக்கும் காவணம் என்ற சொல்லைப் பயன்படுத்திக் கவிஞர் குறிப்பிட்டுள்ளார்.

## நீர்வளம்

திருவில்லிபுத்தூரில் இருக்கும் திருமுக்குளமானது மூன்று நதிகளின் சங்கமம் என்று கருதப்படுகிறது. மேலும் ,காலநேமக என்று அரக்கனை வராகப்பெருமான் வதம் செய்த இடம் என்றும் கூறுவர். திருவில்லிபுத்தூர் 'வராகக்ஷேத்திரம்' என்றும் அழைக்கப்படுகிறது. ஆண்டாள்


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

நாச்சியார் எண்ணெய்க்காப்பு உற்சவத்தின்போது திருமுக்குள நீரில் நீராடுவது உண்டு .

அத்தகைய திருவல்லிபுத்தூரில்,

**" மும்மாரி பெய்து முழுசம்பாத் தான் விளைய**

**கம்மாய்கள் தான்பெருகி கவிந்து வழிந்தோட"-( கோ.நா.தா,24)**

என்று கவிஞர் நீர்வளத்தைப் பதிவு செய்கிறார். ஆண்டாளும் திருப்பாவை மூன்றாவது பாசுரத்தில் மும்மாரியை வேண்டினார். அச்சாயல் கவிஞரிடமும் காணப்படுகிறது.

**" தலையருவி பாயும் தடம் சூழ்ந்த முக்குளமும்**

**மலையருவி பாயும் வயல் சூழ்ந்த தென்பொதுவை"-( கோ.நா.தா,27)**

என்று திருமுக்குளத்தின் சிறப்பையும் தென்புதுவையின் நீர்வளத்தையும் கவிஞர் பதிவு செய்கிறார்.

**நிலவளம்**

முத்துக் கொழிக்கும் நகரான தென்புதுவையில் நிலவளம் சிறப்பாக உள்ளது.

**" சென்னெல்களை முத்தீன்று செழிக்கும் புதுவையிலே"-( கோ.நா.தா,56)**என்று நெல்விளையும் பூமியின் வளத்தினைக் கவிஞர் பதிவு செய்கிறார்.

**" சென்னெல் விளைய செகமுழுதும் தான் செழிக்க**

**கன்னல் விளைய கமுகமரம் தான்பழுக்க" -( கோ.நா.தா,22)**

என்ற கண்ணிகளில் தென் புதுவையின் நிலவளம் பேசப்படுகிறது. நெல் விளைந்தால் உணவுத் தட்டுப்பாடு இன்றி மக்கள் இன்பமாக வாழ்வர். கன்னல் எனும் கரும்பு விளையும் இடம் இனிமையானதாகவும் வளம்மிக்க மண்ணாகவும் இருக்கும். கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவதற்கான உடல் ஆரோக்கியம் கிடைக்கும். பக்தி பெருகும்.

**" மாங்கனிகள் தூங்க மந்தி குதிகொள்ள**

**தேன்கூடு விம்மிச் செழித்து வழிந்தோட"-(கோ.நா.தா,21)**

என்ற வரிகளும் தென்புதுவையின் வளத்தைப் படமிட்டுக் காட்டுகிறது.

**" வாழையிடை பழுத்து வருக்கைப் பிலாபழுத்து**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - II
FEB – 2026 E-ISSN : 2584 – 1238

**தாழையும் பூத்துத் தலையாலே தான் சொரிய்'-(கோ.நா.தா,25)**

**" தென்னை மடல்விரிய செங்கரும்பு முத்தீன**

**புன்னை முகிள்விரிய புதுவை வனந்தனிலே'-( கோ.நா.தா,30)**

போன்ற வரிகளில் முக்கனிகளும் தென்னையும் புன்னையும்எல்லாவிதமான காய்களும் பழங்களும் விளையும் தென் புதுவையின் நிலவளத்தினைக் கவிஞர் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

**சரணாலயம்**

திருவில்லிபுத்தூர் சாம்பல் அணில் சரணாலயத்திற்கு புகழ்பெற்றது . மேலும் செண்பகத்தோப்பு என்னும் பகுதியில் பல்வேறு விலங்குகள் இன்றும் வாழ்ந்து வருகின்றன.

**" வண்டுகளும் பாட மயிலினங்கள் தான்பாட"-( கோ.நா.தா,15)**

**" வெம்புலிகள் வாழும் மேரு சிகரத்தில் அம்புலிகைக் கவளமென்று தும்பி வழிபறிக்கும்"-( கோ.நா.தா,23)**

**" புன்னையும் பூக்க புறத்தை கிளிகூவ அன்னமும் பேசும் அழகான தென்புதுவை"-( கோ.நா.தா,26)**

போன்ற வரிகளில் தென்புதுவை நகரில் வாழும் பல்வகை உயிர்களைப் பற்றி கவிஞர் பதிவுசெய்கிறார். அனைத்து உயிர்களும் மகிழ்ச்சியாகத் தென்புதுவை என்னும் சரணாலயத்தில் வாழ்ந்து வருகின்றன என்பது கவிஞரின் கருத்து .திருமாலின் வாகனம் கருடன் . ஆண்டாளைத் திருமணம் செய்து கொள்ள அரங்கன் வரும்போது கருட வாகனத்தில் வந்தார்.இதனை,

**" கொற்றப் புள்ளில் ரெங்கர் கொடிய வனங்கடந்து**

**வெற்றிச் சங்கூதி வில்லிபுத்தூர் தன்னில்வந்து'-( கோ.நா.தா,145)**

என்ற வரிகளால் அறியலாம் . அஃறிணை உயிரினங்களும் ஆவலுடன் வர விரும்பும் நகரம் தென்புதுவை என்பதை ஆசிரியர் பறைசாற்றுகிறார்.

**நந்தவனம்**

ஆழ்வார்களுள் தொண்டரடிப் பொடியாழ்வாரும் ,பெரியாழ்வார் நந்தவனம் அமைத்து இயற்கையைப் பராமரித்து வந்தனர்.



http://Creativecommons.org//license/by/4.0/.

**" சீராரு மெங்கள்விஷ்ணு சித்தர்நந் தாவனத்தில்**
**ஏராருந் துளசிமுல்லை யேகமாய்த் தானும்வச்சு**
**வச்ச பயிர்களுக்கு வளரவே நீர்பாய்ச்சி**
**உச்சிதமாய்ப் பயிர்கள்செய் துகந்திருக்கும் வேளையிலே"**
**-( கோ.நா.தா,31,32)**

என்ற கண்ணிகளால் விஷ்ணுசித்தரின் மலர்க் கைங்கரியத்தை அறிய முடிகிறது . துளசியின் கீழ் ஆண்டாள் நாச்சியார் அவதரித்தார்.இதனை ,

**"ஆடித் திருப்பூரத்தில் அழகான துளசியின்கீழ்**
**நாடி யுதித்ததிரு நாயகியைச் சொன்னாரார்!"-(கோ.நா.தா,34)**
**" வண்டினங்கள் பாடும் மதுவொழுகும் பூங்காவில்**
**பண்டுபெரியாழ்வார் பரிந்தெடுத்த தெள்ளமுதே" -( கோ.நா.தா,55)**

போன்ற வரிகளால் அறிய முடிகிறது.

**செண்பகப்பூ ( கோ.நா.தா,16), செங்குவளை ( கோ.நா.தா, 19)**போன்ற பல மலர்கள் தென்புதுவையில் பூத்துக்குலுங்கின.

**" பூ மலர்கள் சூழும் பூங்கா வனத்துதித்த**
**மாமகளே சோதி மரகதமே தாலேலோ"-( கோ.நா.தா,54)**

போன்ற வரிகளில் பூக்கள் நிறைந்த புதுவையின் வளம் பேசப்படுகிறது.

## இயற்கைப் பயன்பாடு

கோதையின் திருமணத்திற்கான அலங்காரத்தினைப் பெரியாழ்வார் எடுத்துரைப்பதாக வரும் கண்ணிகளில்,

**" கரும்பினால் கால்நிறுத்திக் கற்பகத்தால் பந்தலிட்ட**
**கரும்பினிடை வாழைகட்டி கஞ்சமலர் தொங்கவிட்டு**
**பூக்கள் கொணர்ந்துபூம்பந்தல் தான்போட்டு**
**மாங்கனிகள் தூக்கி வருக்கைப் பிலாதூக்கி**
**தேங்கனிகள் தூக்கி சிறப்பா யலங்கரித்து"-( கோ.நா.தா,134)**


http://Creativecommons.org//license/by/4.0/.

இயற்கையின் பயன்பாடு நன்கு புலப்படுகிறது . இயற்கை வளம் நிறைந்து இருந்தால்தான் மனிதர்களால் அதைப் பயன்படுத்தி இன்பமாக வாழ முடியும் என்பதை இதன் மூலம் அறியலாம்.

## இயற்கையே அழகு

கோதை நாச்சியாருக்குத் தாலாட்டு பாடும் போது அவர்களின் அழகை வருணிப்பதற்கு இயற்கையுடன் ஒப்பிடுகிறார் கவிஞர்.

**" அன்னமே தேனே அழகே அரிவையரே**
**சொன்னமே மானே தோகையரே தாலேலோ.**
**பொன்னே புனமையிலே பூங்குயிலே மாந்துளிரே**
**மின்னே விளக்கொளியே வேதமே தாலேலோ" -( கோ.நா.தா,46,47)**

என்ற வரிகளால் இயற்கையைச் சொல்லி இறைவியைப் பெருமைப்படுத்தும் பாங்கு புலனாகிறது.

## தொகுப்புரை

வைணவச் சிற்றிலக்கிய வகைகளில் வரும் கோதை நாச்சியார் தாலாட்டு தென்புதுவை நகரின் நிலவளம் ,நீர் வளம் , பறவைகள், விலங்குகள், பூக்கள், காய்கள் ,பழங்கள் முதலிய பல்வகை வளங்களை அழகாக எடுத்தியம்புவதை இதன் மூலம் நம்மால் அறிய முடிகிறது . இயற்கையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு ஊர் மக்களிடமும் காணப்பட வேண்டும் . நம் மண்ணைச் சார்ந்த வளங்களை நாம் அழித்து விடக்கூடாது என்பதற்கு அன்றைய தென்புதுவை ஒரு சான்றாக அமைந்ததை இதன் மூலம் நம்மால் அறிய முடிகிறது. இயற்கையில் இறைவனைக் காணலாம். இயற்கையைக் காத்தால் இறைவன் அருள் கிடைக்கும் என்பதும் இதன் மூலம் அறியலாகிறது.

## துணைநின்ற நூல்கள்

1. கோதை நாச்சியார் தாலாட்டு – திருஞாந முத்திரைப் பிரசுராலயம், ஆழ்வார் திருநகரி.
2. நாச்சியார் திருமொழி- ஸ்ரீ நிதி பப்ளிகேஷன்ஸ், ஸ்ரீ வில்லிபுத்தூர்.
3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் – டாக்டர் .எஸ்.ஜெகத்ரட்சகன் உரை – ஆழ்வார்கள் ஆய்வு மையம்,சென்னை.


http://Creativecommons.org//license/by/4.0/.

http://Creativecommons.org//license/by/4.0/.